# அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

## ஸ்ரீ சார்வரி வருடம் வைகாசி மாதம் 26–ஆம் நாள் ஜீன் மாதம் 08.06.2020ம் நாள் திங்கள் கிழமை பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ள அவசர கூட்டப் பொருள் விபரம்

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் தொலைபேசி செய்தி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியின் படி அறந்தாங்கி நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளை புதுப்பிக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் 2020–2021ன் (TURIP 2020-2021) கீழ் ரூ.475.00லட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி திட்டத்தின் கீழ் கீழ்கண்டுள்ளவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள பழுதடைந்த சாலைகளை புதுப்பிக்க அனுமதியும், மேற்படி திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற கருத்துரு பிரேரனை அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**பணிகள் விபரம்**

| வ.எண் | வார்டு எண் | சாலை பணிகள் மேற்கொள்ளும் பகுதிகளின் விபரம் | பணியின் தன்மை | சாலையின் நீளம் கி.மீ. | சாலையின் அகலம் மீ. | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|
| **சிப்பம் –1** | | | | | | |
| 1 | 01,06, 16,21,22,23,27 | ராஜன் நகர், வி.எஸ்.ஆர். மற்றும் குறுக்கு சாலை, கணபதி நகர், கோட்டை –1, காரைக்குடி ரோடு வசந்தம் மஹால் அருகில், வீரமாகாளியம்மன் கோவில் ரோடு, அருகன் குளம், வெள்ளாறு நீருந்து நிலையம் சாலை, கோட்டை–2 சிவன் கோவில் பிரதான சாலை, அண்ணா நகர், அக்னி பஜார் கம்மங்காடு ரோடு மற்றும் கள்ளி சந்து பழைய மின்வாரிய அலுவலக சாலை தார் சாலை அமைத்தல். | தார் சாலை | 4.599 | 4.00 | 200 |
| | | கூடுதல் | | **4.599** | | **200.00** |

**தீர்மான எண்:–** 16

**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

## சிப்பம் –2

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 03,04, 05,06, 10,11,12,17,22, 24,25, 27 | சட்டமன்ற உறுப்பினர் அலுவலக சாலை, பட்டுக்கோட்டை ரோடு அலெக்ஸ் பாத்திரகடை குறுக்கு சாலை, புது நகர் சாலை, நவித் காலணி சாலை, தாரணி நகர், எல்.என்.புரம் சன்னதி வயல் பிள்ளையார் கோவில் அருகில், ராம காந்தி கல்யாண மண்டபம் சாலை எல்.என்.புரம் –3சாலை, (அக்ரஹாரம் ) ரெஙகோஜிபாவா தெரு. ராஜாஜி நகர், எல்.என்.புரம் தென்றல் நகர் இ.பி. காலணி, எல்.என்.புரம் –3 ராம காந்தி கல்யாண மண்டபம் முதல் சுடுகாடு வரை, வளையல்காரத் தெரு, எல்.என்.புரம் நீதி மன்றம் அருகில், எழில் நகர் 15ம் வீதி, அப்துல் ஹமீது குறுக்கு தெருக்களில் தார்தளம் அமைத்தல் | தார் தளம் | 4.609 | 4.00 | 200 |
| | | கூடுதல் | | 4.609 | | 200.00 |

## சிப்பம் –3

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 02,03,05,11, 13,21,24,25 | எழில் நகர்–6வது தெரு, எழில் நகர் –8வது தெரு, எழில் நகர் வீரானார் கோவில் எதிர் சாலை, வடிவேல் பிள்ளை குறுக்கு சந்து, பசுமை இல்லம் குறுக்கு சாலை கோட்டை–6ம் வீதி, களப்பகாடு –2வது சாலை, களப்பகாடு 3வது சாலை, மணிவிளான் 5வது குறுக்கு சாலை, கேட்டை–1 பைப்லைன் குறுக்கு சாலை, எல்.என்.புரம் குறுக்கு சாலை நீரேற்று நிலையம் அருகில், களப்பகாடு –3வது குறுக்கு சாலை மற்றும் சன்னதிவயல் –1வது சாலைகளில் சிமெண்ட் கான்கிரீட் பாவர் பிளாக் சாலை அமைத்தல் | பேவர் பிளாக் சாலை | 1.615 | 3.00 | 75 |
| | | கூடுதல் | | 1.615 | | 75.00 |
| | | **மொத்த திட்ட மதிப்பு** | | **10.823** | | **475.00** |

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு.</u><br>1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2020–2021 (TURIP 2020-2021) ன் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 2</u></td><td>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் தொலைபேசி செய்தி மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் அலுவலக தொலைபேசி செய்தியின் படி அறந்தாங்கி நகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள புதுக்குளத்தினை சுத்தம் செய்து, தூர் வாரி தடுப்பு சுவர் அமைத்து நீர் நிலையை பாதுகாக்கவும் ரூ.50.00 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற தயார் செய்யப்பட:டுள்ள மதிப்பீடு கருத்துரு பிரேரனை அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br><br><u>அலுவலக குறிப்பு.</u><br>1. மதிப்பீடுகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்<br>2. முழு மான்யமாக ஏதேனும் ஒரு திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம்.</td><td><u>தீர்மான எண்:–</u> 17<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td><u>பொருள் எண். 3</u></td><td>அறந்தாங்கி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து இந்நகராட்சி எல்.என்.புரம் –3வது தெரு குறுக்கு சாலையினை பேவர் பிளாக் சாலையாக அமைக்க ரூ.6.00 லட்சம் ஒதுக்கீடு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர், புதுக்கோட்டை அவர்களின் செயல்முறை ந.க.எண்.பி/3406/2019 நாள்.17.03.2020 உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவு மன்றத்தின் பாதிவிற்கு வைக்கப்படுகிறது.<br>மேற்படி பணிக்கு 22.05.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><table><tr><th>வ. எண்.</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>சதவிகிதம்</th></tr><tr><td>1)</td><td>திரு. கே.பி. சாத்தப்பன்<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>0. 03 % குறைவு</td></tr><tr><td>2)</td><td>திரு.டி.மெய்ஞானம்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர்</td><td>3.69 % அதிகம்</td></tr></table></td><td><u>தீர்மான எண்:–</u> 18<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் பதிவு செய்யலாம்<br>2. மன்றம் அனுமதிக்கலாம்<br>3. மேற்படி பணிக்கு திரு.கே.பி. சாத்தப்பன், நகராட்சி ஒப்பந்ததாரர், கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.03 சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். (ந.க.எண்.1251/2020/இ1) | |
| **<u>பொருள் எண். 4</u>** | இந்நகராட்சி மேற்கு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சுவரில் மேற்கு மற்றும் தெற்கு பகுதியில் இடிந்துள்ள பகுதிகள் மற்றும் கிழக்கு கட்டித்தில் தரைதளம். மின்சார வசதிகள், வர்ணம் பூசுதல் மற்றும் கதவு ஜன்னல்களுக்கு வர்ணம் பூர்சுதல் போன்ற அத்தியாவசிய பழுது மற்றும் மராமத்து பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6.60 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0397/2020/இ1) | **<u>தீர்மான எண்:–</u>** 19<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

**ஒம்/–த.பாஸ்கரன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**

## அறந்தாங்கி நகராட்சி

## நகர்மன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

**ஸ்ரீ விகாரி வருடம் ஆனி மாதம் 16–ஆம் நாள் ஜீன் மாதம் 30.06.2020ம் நாள் செவ்வாய் கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள் விபரம்**

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 1** | நகராட்சி ஆணையர் அவர்களின் மே–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 20<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 2** | நகராட்சி பொறியாளர் அவர்களின் மே –2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:–**<br><br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண்:–** 21<br>**தீர்மானம்:–** பதிவு செய்யப்பட்டது |
| **பொருள் எண். 3** | தமிழக முதல்வர் அவர்களால் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளதின் படி அரசு மற்றும் நகராட்சி பள்ளி கழிவறை மற்றும் பள்ளி வளாகங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமித்து பணிபுரிந்து வருகின்றனர். அப்பணியாளர்களுக்கு மாத ஊதியம் வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ. 10 லட்சத்திற்கு ( ரூபாய் பத்து லட்சம் மட்டும் ) க்கு மன்றப்பொருள் வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்:–** 22<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கலாம் |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. கல்வி நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | |
| **<u>பொருள் எண். 4</u>** | இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயக்கப்பட்டு வரும் கீழ் கண்டுள்ள வாகனங்களுக்கு 2020–21ம் ஆண்டிற்கு உண்டான தகுதிச்சான்று பெறவும் வாகன பராமரிப்பு பணிகள் செய்யவும் ஆயுள் காப்பீடு பிரீமியம் செலுத்தவும் அனுமதிக்கும் உத்தேச செலவினம் ரூ.10.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. டி.என்.55. பி. 1852 – டிப்பர் லாரி<br>2. டி.என்.55. சி. 4730 – மினி லாரி<br>3. டி.என்.55.எச்.9239 – கழிவுநீர் அகற்றும் வாகனம்<br>4. டி.என்.55.பி.9353 – டிப்பர் லாரி<br>5. டி.என்.55.ஏ இசட் 5800 – டம்பர் பிளேசர் வாகனம்<br>6. டி.என்.55 எஸ் 3520 – டம்பர் பிளேசர் வாகனம்<br>7. டி.என்.55 ஆர் 1012 1020 – டிராக்டர்<br>8. டி.என்.55 ஏ.டி.9117 – ஜே.சி.பி<br>9. டி.என்.55 பி.இசட் 0160 – டிப்பர் லாரி<br><br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி தொகை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:–</u>** 23<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கலாம் |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 5</u>** | இந்நகராட்சியில் அவசர அவசியம் கருதி கீழ்கண்ட பணிகளை நகராட்சிகளின் சட்டம் பிரிவு–15ன் கீழ் செய்யப்பட்டதையும் அதற்கான செலவினங்களுக்கும் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>பதிவு செய்யலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 24<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.வே.சரவணன், ஓட்டுநர் | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டி.என். 55 பி 9353 டிப்பர் வாகனத்தில் பழுது நீக்கம் செய்த வகையில் செலவினம் | ரூ.4980.00 |
| 2 | திரு.மு.ராதா, மின் கம்பியாளர் | இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்கு தெருவிளக்கு உதிரி பாகங்கள் வாங்கியது, குடிநீர் குழாயில் மோட்டார் வைத்து உறிஞ்ச கூடாது என விளம்பரம் செய்த வகையில் | ரூ.7175.00 |
| 3 | திரு. சி.சேகர், துப்புரவு ஆய்வாளர் | பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை, கோவிட் 19 காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் ப்ளக்ஸ், ஸ்டிக்கர் பிரிண்ட் செய்த வகையில் | ரூ.19600.00 |
| 4 | சந்தோஷ் ஏஜென்ஸீஸ், அறந்தாங்கி | பொது சுகாதாரப்பிரிவு டி.என். 55 பிஒய் 5509 டாட்டா ஏஸ் வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கிய வகையில் | ரூ.3350.00 |
| 5. | விக்னேஸ் மெட்டல்ஸ் அன்ட் பர்னிச்சர், அறந்தாங்கி | அம்மா உணவகத்திற்கு தேவையான சமையல் உபகரணம் வாங்கிய வகையில் | ரூ.46335.00 |
| 6. | திரு.ஆர்.ராசு, ஒப்பந்ததாரர் | இந்நகராட்சி பகுதியில் தமிழக அரசின் உத்திரவின்படி கோவிட் 19 கொரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கையாக பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் கை கழுவும் அமைப்பு நிறுவுதல் | ரூ.93730.00 |
| 7. | Al Bismi multirepairing centre, Aranthangi | பொது சுகாதாரப்பிரிவு கோவிட் –19 கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகளில் கிருமி நாசினி தெளிக்கும் பவர் ஸ்பிரேயர் சரி செய்தவகையில் | ரூ.3430.00 |

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 6</u>** | இந்நகராட்சி கோட்டை –2ம் தெருவில் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்கள் செல்லும் ஒருவழிப்பாதையாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி சாலையின் ஓரத்தில் மழைநீர் வடிகால்கள் ஆங்காங்கே சேதடைந்து உள்ளதால், பொது போக்குவரத்து பாதிக்காமல் இருக்க மேற்படி சேதமடைந்துள்ள வாடிகால் பகுதிகளை சீரமைக்க அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2509/இ1/2020) | **<u>தீர்மான எண்:–</u>** 25<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 7</u>** | இந்நகராட்சி கலவை உரக்கிடங்கின் உட்புறம் குப்பை குவியல்களை உயிரி செயலாக்கத்தின் (Bio Mining) மூலம் நிலத்தினை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. அதன் படி குப்பைகளை வேறு இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளளது. அந்த பகுதியில் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி நடைபெற குப்பைகள் அகற்றியதால் பள்ளமான பகுதியில் கிராவல் கொண்டு நிரப்பிட அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.90 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:–</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2512/இ1/2020) | **<u>தீர்மான எண்:–</u>** 26<br>**<u>தீர்மானம்:–</u>** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| **பொருள் எண். 8** | இந்நகராட்சி மணிவிளான் –2ம் தெருவில் மண்டிக்குளம் கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பு சுவர் ஆங்காங்கே சேதடைந்து உள்ளதால், பொது போக்குவரத்து பாதிக்காமல் இருக்கவும் குளத்தின் கரையை பலப்படுத்தவும் மேற்படி சேதமடைந்துள்ள தடுப்பு சுவர் பகுதிகளை சீரமைக்க அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.3.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:–**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2511/இ1/2020) | **தீர்மான எண்:–** 27<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண். 9** | இந்நகராட்சி எழில் நகர் தெருவில் பாவாணர் வீதியில் அண்ணா நகர் பிரதான சாலையையும், எழில் நகர் பகுதியையும் இணைக்கும் பகுதியில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு வசதியாக சிறுபாலம் அமைக்க அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1.25 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:–**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.2510/இ1/2020) | **தீர்மான எண்:–** 28<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண். 10** | அறந்தாங்கி நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்து வரும் நீரேற்று நிலையங்களில் சோடியம் ஹைப்போ குளோரைடு குளோரினேசன் சப்ளை செய்திட இந்நகர்மன்ற தீர்மான எண்.188 நாள்.20.03.2020 ல் மதிப்பீட்டுத் தொகை ரூ.6.50 லட்சத்திற்கு மன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.<br>மேற்படி பணிக்கு 22.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:–** 29<br>**தீர்மானம்:–** அலுவலக குறிப்பு 1, 2 , 3 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1) | சூரியா ஏஜென்ஸி, திண்டுக்கல் | 0.31 % குறைவு |
| 2) | ஜெயம் எலெக்ட்ரிகல்ஸ், திண்டுக்கல் | 1.23 % அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு சூரியா ஏஜென்ஸி, திண்டுக்கல் நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.31 சதவிகிதம் குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
3. மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதனையும், பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதனையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 1690/2020/இ1)

**<u>பொருள் எண். 11</u>**

அறந்தாங்கி நகராட்சி பகுதியில் கொரோனா நோய் தொற்று ஏற்பட்டுள்ளவர்களின் வீடுகள் உள்ள பகுதியை சுற்றி தடுப்பு (Containment Zone Barricading ) ஏற்படுத்த அனுமதிக்கும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தற்பொழுது நகர் பகுதியில் கொரோனா நோய் தொற்று ஏற்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை தொடங்கி உள்ளதால் அவசர அவசியம் கருதி 09.06.2020 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளை முடிவு செய்திட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>தீர்மான எண்:—</u>** 30

**<u>தீர்மானம்:—</u>** அலுவலக குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

<table>
<tr><td></td><td>

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை / 1 மீ |
|---|---|---|
| 1) | திருமதி.கே. தேன்மொழி<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.45.50 |
| 2) | திரு.டி.மெய்ஞானம்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.44.50 |
| 3) | திரு. ஆர்.ராசு,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.43.50 |

<u>அலுவலகக் குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணிக்கு திரு.ஆர்.ராசு, நகராட்சி ஒப்பந்ததாரர், கொடுத்துள்ள விலைப்புள்ளி மதிப்பீட்டை விட குறைவாக உள்ளதனை ஏற்கலாம்.
3. கெரோனா நோய் தொற்று பரவல் தீவிரத்தின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் (பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2121/2020/இ1)

</td><td></td></tr>
<tr><td><u>பொருள் எண். 12</u></td><td>

இந்நகராட்சி சொந்தமான மற்றும் கட்டுப்பாட்டில் இயங்கி அம்மா உணவகத்தில் சமையலறை மற்றும் பொருள் சேமிப்பு அறையில் மேலுள்ள பால் சீலிங் தகடுகள் விழுந்து விட்டது. மேற்படி தகடுகளை மாற்றவும் பழுது நீக்கம் செய்ய அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். /இ1/2020)

</td><td>

<u>தீர்மான எண்:–</u> 31<br><u>தீர்மானம்:–</u> அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **<u>பொருள் எண். 13</u>** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு புதிதாக 5 லிட்டர் கெள்ளளவு கொண்ட போர்டபிள் புகை இயந்திரம் 2 எண்ணிக்கை வாங்கிட அனுமதிக்கும், அதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.15 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் இருந்து இப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். /எச்1/2020) | **<u>தீர்மான எண்:—</u>** 32<br>**<u>தீர்மானம்:—</u>** அலுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது |
| **<u>பொருள் எண். 14</u>** | அறந்தாங்கி நகராட்சியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகாக கொள்முதல் செய்யப்பட்ட கை உறை, மாஸ்க், லைசால், சோடியம் ஹைப்போ குளோரைடு, PPE Kit, Hand sanitizer, Hand sprayer, விழிப்புணர்வு ப்ளக்ஸ் மற்றும் நோட்டீஸ், பணியாளர்களுக்கு அடையாள அட்டை, சுண்ணாம்பு தூள், பிளீச்சிங் பவுடர், பினாயில், தினசரி காய்ச்சல் பரிசோதனை செய்யும் கருவி, கபசுர குடிநீர் பொடிகள் ஆகியவற்றிற்கான மொத்த செலவின தொகை ரூ.39,92,020/= அரசால் நிவாரண நிதியாக மூன்று தவணைகளாக வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.30,50,000/= போக கூடுதலாக செலவிடப்பட்டுள்ள ரூ.9,42,020/= பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br><u>அலுவலக குறிப்பு :—</u><br><br>1. மன்றப்பொருள் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:—</u>** 33<br>**<u>தீர்மானம்:—</u>** இப்பொருள் தொடர்பாக முந்தைய ஆணையர்(பொ) மன்றப்பொருள் குறிப்பின் பேரில் அனுமதிக்கப்படுகிறது |
| **<u>பொருள் எண். 15</u>** | அறந்தாங்கி நகராட்சியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான கபசுர குடிநீர் பொடிகள் வாங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.2,00,000/= (ரூபாய் இரண்டு லட்சத்திற்கு) பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **<u>தீர்மான எண்:—</u>** 34<br>**<u>தீர்மானம்:—</u>** இப்பொருள் தொடர்பாக முந்தைய ஆணையர்(பொ) அவர்கள் மன்றப்பொருள் குறிப்பின் படி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு :–</u><br><br>1. மன்றப்பொருள் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். | |
| **<u>பொருள் எண். 16</u>** | அறந்தாங்கி நகராட்சியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான Gloves, Masks, Sanitizer, சுண்ணாம்பு தூள், சோடியம் ஹைப்போ குளோரைடு வாங்க ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.10,00,000/= (ரூபாய் பத்து லட்சத்திற்கு) பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br><br><u>அலுவலக குறிப்பு :–</u><br><br>1. மன்றப்பொருள் வைக்க மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மன்றம் முன் அனுமதிக்கலாம். | **<u>தீர்மான எண்:–</u>** 35<br>**<u>தீர்மானம்:–</u>** இப்பொருள் தொடர்பாக முந்தைய ஆணையர்(பொ) அவர்கள் மன்றப்பொருள் குறிப்பின் படி அனுமதிக்கப்பட்டது |

**ஓம்/–த.பாஸ்கரன்**
**தனி அலுவலர்**
**அறந்தாங்கி நகராட்சி**